# நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சகல தரப்புகளுக்குமான வழிகாட்டல்

## 2022/23 - பெரும்போகம்

## நிகழ்ச்சித் திட்டத்துடன் சம்பந்தப்படும் உத்தியோகத்தர்கள் யாவருக்கும்

## 2022/23 பெரும்போகத்தில் நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சகல தரப்புகளுக்குமான வழிகாட்டல்

"2022/23 பெரும்போகத்தில் நெல்லை பயிரிடுவதற்கு தேவையான சுற்றாடல்நேய உரங்களை நிவாரண முறையில் விநியோகித்தல் மற்றும் இரசாயன உரங்களின் விலைகள் நிர்ணயம்" என்ற தலைப்பில் 2022.08.22 ஆம் திகதி கமத்தொழில் அமைச்சு சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2022.09.22 ஆம் திகதி அன்று கூடிய அமைச்சரவை கூட்டத்தில், அனுமதிப் பத்திரம் பெற்ற உற்பத்தி தரப்புகளின் உரங்களை விவசாயிகள் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை கொள்வனவு பற்றிய நிலையியல் குழு சிபாரிசு செய்துள்ளது அதற்கு இணங்க இரண்டு ஹெக்டேயர் என்ற உச்ச அளவுக்கு அமைய ஒரு ஹெக்டேயருக்கு ரூ. 20,000.00 தொகையை ஒரு உர நிவாரணமாக அரசாங்கம் பொறுப்பேற்கும் வகையில் அனுமதி கிடைத்துள்ளது.

இந்த நாட்டின் விவசாயத்தை நிலையான சுற்றாடல்நேயமான ஒரு முறைமையாக ஊக்குவிப்பதும் மற்றும் ஒட்டுமொத்த விவசாயத்திற்கு இயற்கை உள்ளீடுகளை மாத்திரம் இடும் வகையில் முறையாக படிப்படியாக நடவடிக்கையை எடுப்பதும் மிக அவசியமாகும்.

ஆகையால், அதன் நிமித்தம் திட்டமிடப்பட்டுள்ள பயணத்தின் ஒரு கட்டமாக, 2022/23 பெரும்போகத்தில் நெல்லை பயிரிடும் பொருட்டு 30% வீதம் சுற்றாடல்நேய உரங்களை பாவிக்கும் நோக்கதில் அரசாங்கத்தின் உர பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் நிமித்தம் குறித்த இந்த வழிகாட்டல் ஆவணம் தயாரிக்கப் பட்டுள்ளது.

குறித்த இந்த வழிகாட்டல் ஆவணத்தில் அரசாங்கத்தின் உரக் கொள்கை, உரங்களுக்கு விண்ணப்பித்தல், உரங்களைப் பகிர்ந்தளித்தல், உரங்களை உரிய முறையில் பாவித்தல், கண்காணித்தல், முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல், மீளாய்வு செய்தல், பெறுபேறுகளை மதிப்பிடுதல் முதலியன போன்ற விடய அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாட்டின் விவசாயத்துடன் சம்பந்தப்படுகின்ற இந்தத் தேசிய கரும பணியை இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறைவேற்றும் முகமாக தேவையான நடவடிக்கைககளை வினைத் திறனாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வது இந்தக் கரும பணியுடன் சம்பந்தப்படும் சகல தரப்புகளினதும் பொறுப்பு என்பதை நான் இங்கு தயவுடன் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையியல்கள், அறிவுரைகள், வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றை உரிய முறையில் ஆராய்ந்து உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தை உரிய பயிர்ச் செய்கை காலப் பகுதியினுள் வெற்றிகரமாக முன்னெடுக்கும் பொருட்டு தேவையான அறிவை அனைத்து ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த தடவை சுற்றாடல்நேய ஒரு உர வகையை குறிப்பாக அந்தந்த பிரதேசத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கும் பொருட்டு இந்த அமைச்சு எந்த தரப்பையும் தேந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காது.

குறித்த ஒரு பிரதேசத்தில் எந்த ஒரு உற்பத்தியும் வினைத் திறன் வாய்ந்ததாக செயல்படும் என்பதை நிச்சயம் இனங்காண முடியாது. ஒரே மாதிரியான உற்பத்தி, அதில் உள்ளடங்கும் போஷனை அல்லது நுண்ணங்கிகள் எண்ணிக்கை மற்றும் வினைத் திறன் என்வற்றின் அடிப்படையில் அது உற்பத்தி வகுதிற்கு வகுதி வேறுபடும். ஆகையால் அந்தந்த உரத்தின் வினைத் திறன் தன்மை அதற்கு பயன்படுத்திய மூலப்பொருள் மற்றும் ஏனைய சுற்றாடல் காரணிகள் என்பவற்றின் அடிப்படையில் தங்கியிருக்கும் என்பதால் அதன் விலையை நிர்ணயிப்பது பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும் என தொழில் நுட்ப மதிப்பீட்டு குழு சுட்டிக் காட்டியுள்ளது.

ஆகையால், இன்றிலிருந்து விவசாயிகள் அவர்களுக்கு பொருத்தமான சுற்றாடல்நேய உர உற்பத்தியை தேர்ந்து எடுப்பதற்கு உரிய வசதிகளை செய்து கொடுக்கும் வேலைத் திட்டம் செயற்படுத்தப்படும்.

இதன் நிமித்தம் அந்தந்த உற்பத்தித் தரப்பின் மூலம், 30% வீத இரசாயன உரத்திற்கு பதிலாக ஒரு ஹெக்டேயர் காணிக்கு பாவிக்க வேண்டிய தனது உற்பத்திகளின் அளவுகள், விலைகள் மற்றும் விநியோகிக்கக் கூடிய கமநல சேவை நிலையங்கள் என்பன பற்றிய விபரங்களை சேகரிக்கும் முகமாக விருப்பம் அழைக்கப்பட்டு கமத்தொழில் அமைச்சின் இணையத் தளத்தில் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு அமைய உற்பத்திகளின் பட்டியலை கமத்தொழில் அமைச்சின் இணையத் தளத்தில் (www.agrimin.gov.lk) பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம். கமநல சேவை நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய உரிய உற்பத்திகளில் உகந்த பொருத்தமான உற்பத்திகளை தேர்ந்தெடுக்கும் வகையில் ஒவ்வொரு கமக்காரருக்கும் விழிப்பூட்டுவதற்கு எல்லா விதத்திலும் நடவடிக்கையை எடுக்க வேண்டும். மாவட்ட விவசாய குழுக்களினதும் மற்றும் பிராந்திய விவசாய குழுக்களினதும் குழு கூட்டங்களிலும் கூட இந்த தகவல்கள் பற்றி கமக்கார்களுக்கு விழிப்பூட்டும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்க அதிபர்களும் மற்றும் பிரதேச செயலாளர்களும் ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நம்புகின்றேன்.

**எம்.பீ.ஆர். புஷ்பகுமார**

செயலாளர்

**உள்ளடக்கம்**


| | | | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1. | அரசாங்கத்தின் சுற்றாடல்நேய உர நிவாரணக் கொள்கை | - | 1 |
| 2. | நிவாரணத்தின் அடிப்படையில் கிடைக்கும் சுற்றடாடல்நேய உரங்களின் அளவுகள் | - | 2 |
| 3. | நிவாரண உரங்களை பெற்றுக் கொள்ளும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு | - | 2 |
| 4. | நிவாரண அடிப்படையில் சுற்றாடல்நேய உரங்களை பகிர்ந்தளிக்கும் போது அதன் நிமித்தம் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை உபயோகித்தல் | - | 6 |
| 5. | சுற்றாடல்நேய உரங்களின் தர நியமங்கள் கட்டுப்பாடு | - | 7 |
| 6. | சுற்றாடல்நேய உரக் களஞ்சியசாலைகளும் மற்றும் அந்த களஞ்சியசாலைகளைப் பதிவு செய்தலும் | - | 13 |
| 7. | நிவாரண வரையறையைகளை விஞ்சி உரங்களை விற்பனை செய்தல், பணத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கைகளை பேணுதல் மற்றும் விநியோகத் தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துதல் | - | 14 |
| 8. | சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துதல் | - | 14 |
| 9. | சுற்றாடல்நேய நிவாரண உரங்களைப் பகிர்ந்தளிக்கும் போது உள்நாட்டு உர உற்பத்தித் தரப்புகளின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும் | - | 15 |
| 10. | சுற்றாடல்நேய உரங்கள் உரிய விதத்தில் பாவிக்கப்படுவதை உறுதிசெய்தல் | - | 16 |
| 11. | கண்காணிப்பு | - | 16 |
| 12. | தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல் | - | 17 |
| 13. | முன்னேற்ற மீளாய்வு | - | 18 |
| 14. | பெறுபேறுகளை மதிப்பிடுதல் | - | 19 |

**அட்டவணை பற்றிய அறிமுகம்**

| | | |
|---|---|---|
| அட்டவணை 01 | - | சுற்றாடல்நேய உர நிவாரண உரித்துக்களுக்கான விண்ணப்பமும் மற்றும் உறுதிப்படுத்தலும் |
| அட்டவணை 02 | - | கொள்வனவு கட்டளை (Purchase Order) |
| அட்டவணை 03 | - | விநியோகிக்கும் நிறுவன உரத்தை பெற்றுக் கொடுக்க உடன்படுதல் |
| அட்டவணை 04 | - | கொம்போஸ்ட்டு உரத்திற்கான இலங்கை தர நியமம் |
| அட்டவணை 05 | - | திரவ சேதன உரத்திற்கான இலங்கை தர நியமம் |
| அட்டவணை 06 | - | உயிரியல் உரத்தை விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தர நியமம் |
| அட்டவணை 07 | - | விஷேட உரங்களுக்கான இலங்கை தர நியம தகவுதிறன்கள் நகல் |
| அட்டவணை 08 | - | அனுமதிப் பத்திரம் பெற்ற உள்நாட்டு விநியோக தரப்புகளிடமிருந்து நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியை கோருதல் |
| அட்டவணை 09 | - | அனுமதிப் பத்திரம் பெற்ற உள்நாட்டு விநியோக தரப்புகளிடமிருந்து நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு தேவையான நிதியை செலுத்துதல் |
| அட்டவணை 10 | - | அனுமதிப் பத்திரம் பெற்ற உள்நாட்டு விநியோக தரப்புகளிடமிருந்து நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு நிதியை செலுத்துதல் |
| அட்டவணை 11 | - | சுற்றாடல்நேய உரங்களின் பகிர்ந்தளிப்பு, விவசாயிகளுக்கான விநியோகம் பற்றிய வாராந்த அறிக்கை |
| அட்டவணை 12 | - | மாதாந்த முன்னேற்ற அறிக்கை - சுற்றாடல்நேய உரங்கள் பகிர்ந்தளிப்பு |
| அட்டவணை 13 | - | நிவாரண அடிப்படையில் பகிர்ந்தளித்த உரங்கள் பற்றிய முன்னேற்றம் |

## 1 அரசாங்கத்தின் சுற்றாடல்நேய உர நிவாரணக் கொள்கை

1.1 **ஒரு (01) ஹெக்டேயருக்கு ரூ. 20,000 என்ற உச்ச வரையறைக்கு அமைய, ஆகக்கூடியது 2 ஹெக்டேயர் வரை நெல்லை பயிரிடும் விவசாயிகள், நெல் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களை இலவசமாக பெற்றுக் கொள்ள உரிதுடையவர்களாவர்.**

1.2 இரண்டு (02) ஹெக்டேயர்களுக்கு அதிகமான காணிகளில் நெல்லைப் பயிரிடுகின்ற விவசாயிகளின் ஒரு பெயர் பட்டியலை தயாரித்து அந்த விவசாயிகளை விரைவில் இனங்காணத் தேவையான ஒரு வேலைத் திட்டத்தை கமநல அபிவிருத்தி ஆணையாளர் தயாரித்து செயற்படுத்த வேண்டும். அந்த விவசாயிகளினது தகவல்கள் அடங்கிய ஒரு தரவுத் தளத்தைத் தயாரித்து கமத்தொழில் இராஜாங்க அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.3 நெற் பயிருக்கான சுற்றாடல்நேய உர நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கின்ற விவசாயிகள் கீழ்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

1.3.1 அவ்வப்பொழுது அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப விவசாயிகள் பூர்த்தி செய்ய வேண்டும் என கடமைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் ஏதும் இருக்குமாயின், அத்தகைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருத்தல்.

1.3.2 நெல் பயிரிடப்படும் வயல் காணி அமைந்துள்ள பிரதேசத்திற்கு உரிய கமக்காரர் அமைப்பின் அங்கத்துவத்தையும் மற்றும் நெற் பயிருக்குரிய சுற்றாடல்நேய உர நிவாரணத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு உரிய கமக்காரர் அமைப்பின் சிபாரிசையும் பெற்றிருத்தல்.

1.4 ஏதாவது ஒரு பயிர்ச் செய்கைப் போகத்தில் பெற்ற உரத்தை அந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் பாவிக்க முடியாதுள்ள சந்தர்ப்பங்களில், அது பற்றி உரிய பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைய முன்னர் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தருக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும். அவ்வாறு அந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் எஞ்சியிருக்கின்ற உரத்தின் அளவுகளை கழித்த பின்னரே எதிர்வரும் பயிர்ச் செய்கைப் போகத்திற்கான நிவாரண உரங்கள் விநியோகிக்கப்படும். அவ்வாறு எழுத்தில் அறிவிக்காமலிருப்பது ஒரு மோசடியான குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு எதிராக, மாவட்ட செயல் குழுவினால் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்க முடியும்.

1.5 நிவாரண அடிப்படையில் கிடைக்கும் உரங்கள் உரிய பயிருக்கு இடப்படும் வரையான விநியோக செயற்பாட்டில் உரங்களின் இருப்புத் தொகைக்கு அந்தந்த சந்தர்ப்பத்தில் பொறுப்பு வகிக்கின்ற நிறுவனம் பொறுப்புக்கூற வேண்டும்.

1.6 நிவாரண அடிப்படையில் கிடைக்கும் உரங்கள் உரிய பயிருக்கு இடப்படும் வரை அது அரச பொதுச் சொத்து எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அரசாங்கம் நிவாரண அடிப்டையில் விவசாயிகளுக்கு வழங்கும் உரம் என்பது 1988 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க (திருத்தல்) சட்டத்தினால் திருத்தப்பட்டுள்ள 1982 இன் 12 ஆம் இலக்க பொது சொத்துக்கள் எனும் விடயத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் பற்றி குறிப்பிடுகின்ற அந்த சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 5 (அ) பிரிவின் கீழ் பொதுச் சொத்து வகுதியில் வரும் ஒரு பொதுச் சொத்தாகும். ஆகையால், நிவாரண அடிப்படையில் கிடைக்கும் சுற்றாடல்நேய உரங்களைப் பெறும் விவசாயிகள் குறித்த கருமத்திற்கு மாத்திரம் அந்த உரங்களைப் பாவிக்க வேண்டும். அவ்வாறு பாவிக்காத சந்தர்ப்பங்களில், குறித்த 1982 இன் 12 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சொத்து வகுதியில் வரும் ஒரு குற்றம் எனக் கருதி, சட்டநடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நிவாரண அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற உரங்கள் தொடர்பாகப் புரியப்படும் குற்றங்களை தடுக்கும் பொருட்டு பொலிஸாரால் விசாரணைகளை மேற்கொள்ளத் தேவையான ஒழுங்குகளை செய்து, அந்த விசாரணைகளுக்கும் மற்றும் சட்டநடவடிக்கைகளுக்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இந்தக் கரும விடயத்தை தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தினது மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோரினால் ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் நிறைவேற்ற வேண்டும்.

## 2 நிவாரணத்தின் அடிப்படையில் கிடைக்கும் சுற்றடாடல்நேய உரங்களின் அளவுகள்

2.1 சுற்றாடல்நேய உர உற்பத்தி நிறுவனம் அந்தந்த சுற்றாடல்நேய உர வகைகளுக்கு உரியவாறு, நெல் பயிரிடப்படும் குறித்த காணியின் அளவுக்கு பாவிக்க வேண்டிய உரங்களின் அளவுகளை சிபாரிசு செய்துள்ளது. குறித்த அந்த உர சிபாரிசுகளை அடிப்படையாக கொண்டு சுற்றாடல்நேய உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்தும் பொருட்டு அந்தந்த சுற்றாடல்நேய உர உற்பத்திகளுக்கு என சிபாரிசு செய்த உர அளவுகள் மற்றும் பெறுமானம் ஆகியன தொடர்பான தகவல்கள் கமத்தொழில் அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாக பிரசுரிக்கப்படும்.

2.2 நிவாரண அடிப்படையில் சுற்றாடல்நேய உரங்களை பெற உரித்துடைய விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்க வேண்டியது அந்த விவசாயிகள் பயிரிடுகின்ற வயல் காணிகளின் அளவுகளுக்கும் சிபாரிசுக்கும் இணங்க ஒரு ஹெக்டேயருக்கு உரிய ரூ.20,000 தொகையை விஞ்சாத உர அளவுகளை மாத்திரமேயாகும்.

## 3 நிவாரண உரங்களை பெற்றுக் கொள்ளும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு

3.1 சுற்றாடல்நேய உரங்களை, கையாளுகை மற்றும் செயற்பாட்டு செலவுகளுக்கு அமைவாக கமநல சேவை நிலையங்களிலிருந்து சுற்றாடல்நேய உர உற்பத்தி நிறுவனங்களின் ஊடாக பெற்று உரிய விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

3.2 விவசாயிகள், அந்தந்த கமல சேவை நிலையங்களின் மூலம் பெற்றுக் கொடுப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உற்பத்திகளை தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் இதன் நிமித்தம் மாவட்ட விவசாய குழு விவசாயிகளுக்கு அறியப்படுத்தி தீர்மானமெடுக்கும் பொருட்டு ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்துவது பொருத்தமானதாகும்.

3.3 அந்த தேர்ந்தெடுத்த உற்பத்திகள் பற்றி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தருக்கு உரிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் (வி.ஆ.உ.உ.) உரிய முறையில் அறிவிக்க வேண்டும் (அட்டவணை 01).

3.4 விவசாயிகளின் அந்த வேண்டுகோள்களுக்கு இணங்க சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகள் விநியோகிக்கவுள்ள உரங்களின் அளவு, கமநல சேவை அதிகாரப் பிரதேசம் மற்றும் வீச்சளவு முதலிய விடயங்களுக்கு அமைய உர இருப்பினது பெறுமானம் அடங்கலாக உரிய விநியோக தரப்புகளுக்கு ஒரு கொள்வனவு கட்டளையை (Purchasing order) கமநல சேவை பிராந்திய உத்தியோகத்தர் தேசிய உர செயலக அலுவலகத்திற்கு பிரதியுடன் அனுப்பி வைக்க வேண்டும் (அட்டவணை 02).

3.5 அந்த வேண்டுகோளை விடுத்து 03 நாட்களுக்குள் உற்பத்தி நிறுவனம் விநியோகிக்க உடன்படலாம் அல்லது உடன்படவியலாது பற்றி கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் தேசிய உர செயலக அலுவலகத்திற்கு பிரதியுடன் அறிவிக்க வேண்டும் (அட்டவணை 03). இதன் நிமித்தம் மின்னஞ்சலை பயன்படுத்த வேண்டும்.

3.6 அதற்கமைய பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்டு சுற்றாடல்நேய உரங்களின் அளவுகளை உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் கமநலசேவை நிலையத்திற்கு அல்லது கமக்காரர் அமைப்பின் உரங்களை பெற்றுக் கொள்ளும் இடத்திற்கு பெற்றுக் கொடுக்க உற்பத்தி நிறுவனம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். பொருட்கள் பொறுப்பேற்கும் அட்டவணையின் மூலப்பிரதியை விநியோகத் தரப்பின் பிரதியாகவும், இணைப் பிரதியை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதியாகவும், மூன்றாவது பிரதியை உரிய கமநல சேவை நிலையத்தின் பிரதியாகவும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அந்த கரும விடயம், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரின் அல்லது விவசாய உற்பத்தி உதவியாளர் இல்லாத பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தரின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்படுதல் அல்லது கமநல அபிவிருத்தி ஆணையாளர் அதிகாரம் அளிக்கும் ஏனைய உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3.7 சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகள் உர இருப்புகளை விநியோகிக்க முன்னர் தொகுதிற்கு ஏற்ப உரிய உரங்கள் உரிய தரத்திற்கு அமைவாக காணப்படுகின்றன என உறுதிப்படுத்தும் பொருட்டு தேசிய உர செயலக அலுவலகத்தின் தர நியம அனுசரிப்பு சான்றிதழை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும். விநியோகிக்கப்படும் உரங்களுக்கான செலவுப்பற்றுச்சீட்டுக்களை விநியோக தரப்புகள் கமநல சேவை பிராந்திய உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும்.

இந்த செலவுப்பற்றுசீட்டுக்களில் உரத்தின் தொகுதி இலக்கம், (உர தொகுதி இலக்கத்திற்கு ஏற்ப தேசிய உர செயலகம் வழங்கிய விற்பனை அனுமதி, இதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய) அளவு, கமநலசேவை அதிகாரப் பிரதேசம், வீச்சளவு, பெறுமானம், எடுத்துச்சென்ற வாகனத்தின் இலக்கம், சாரதியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் முதலிய தகவல் விபரங்களை உள்ளடக்க வேண்டும்.

3.8

3.8.1 உள்நாட்டு சுற்றாடல்நேய உர உற்பத்தித் தரப்புகளினது உற்பத்திகளின் மூலமாக உரங்கள் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், இந்த வழிகாட்டல் ஆவணத்தின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உரங்களின் தர நியமங்கள் கட்டுப்பாடுகள் தொடர்பாக தேசிய உர செயலக அலுவலகத்தினால் விநியோகிக்கப்படும் அனுசரிப்பு சான்றிதழை பெற்றதன் பின்னர் மாத்திரமே கமநல அபிவிருத்தி திணைக்களத்தினது இணக்கத்தின் பேரில் அந்த முழு உர அளவையும் கமநல அபிவிருத்திப் பிராந்திய உத்தியோகத்தரினது ஒருங்கிணைப்பின் கீழ் விவசாயிகளின் குறித்த உரிய மத்திய நிலையங்களுக்கு எடுத்துச்சென்று வழங்குவதற்கு அந்த உள்நாட்டு சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்த உரங்களின் அளவுகளுக்கு உரிய பெறுகைப் பற்றுச்சீட்டில் (GRN) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரும், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரும் தமது கையொப்பங்களை இட்டிருக்க வேண்டும்.

இதற்கான செயற்பாட்டு மற்றும் நிருவாக செலவுகளை மாவட்ட உர குழு, தேசிய உர செயலக அலுவலகத்திற்கும் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கும் பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டின் பேரில் கமத்தொழில் அமைச்சின் ஊடாக ஒதுக்கும்.

விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்கும் போது பற்றுச்சீட்டுக்களை வழங்க வேண்டும். மேலும் சகல சுற்றாடல்நேய உரங்களின் விலைகள் கமநலசேவை பிராந்திய நிலையங்களில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

3.8.2 **2022 பெரும்போகத்தில் உரங்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டிற்கு உரிய எரிபொருள் விநியோகம் தடைப்படும் காரணத்தினால் கமநல சேவை நிலையங்களில் எஞ்சியுள்ள திண்ம சேதன உரங்களை, மேலும் அவற்றின் தர நியமங்களை பரிசோதித்து, உரங்கள் ஆலோசனை குழுவுக்கு சமர்ப்பித்து, அதன் சிபாரிசுகளை அமைச்சுக்கு அனுப்பி, ஒரு விஷேட அனுமதி கிடைத்த பின்பு, விவசாயிகளினது விருப்பத்தையும் பெற்றுக் கொண்டு பகிர்ந்தளிக்கலாம். அந்த உரங்கள் முன்னைய பயிர் செய்கை போகத்தில் அமைச்சரவை கொள்வனவு பற்றிய நிலையியல் குழு விலை நிர்ணயித்த உரங்கள் என்பதால் எந்தவொரு காரணத்திற்காகவும் குறித்த விஷேட அனுமதி இன்றி பகிர்ந்தளிக்கக் கூடாது. அதற்கு அமைய பெற்றுக் கொள்ளும் அனுமதியின் போில் பகிர்ந்தளிக்கப்படும் உரங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்க அதிபர்களினது சிபாரிசுகளின் போில் அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.**

3.9 சுற்றாடல்நேய நிவாரண உரங்களுக்கு விண்ணப்பித்தல்

3.9.1 சுற்றாடல்நேய நிவாரண உரத்தை பெற்றுக் கொண்டு பகிர்ந்தளிக்க முன்வரும் கமநல சேவை நிலையம் தனது அதிகாரப் பிரதேசத்தில் உரிய பயிர்ச் செய்கைப் போகம் ஆரம்பமாகுவதற்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னராவது உரங்களுக்கான தேவையை குறிப்பிட்டு எழுத்திலான ஒரு வேண்டுகோளை அந்த கமநல சேவை அதிகாரப் பிரதேசத்திற்கு உரங்களை விநியோகிக்க விருப்பம் தெரிவித்துள்ள சுற்றாடல்நேய உர உற்பத்தி நிறுவனத்திற்கு மேலே காணப்படும் 3.4 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுவாறு அனுப்பி வைக்க வேண்டும். அதற்கு இணங்க கமநல அபிவிருத்தி திணைக்களமும் உரிய சுற்றாடல்நேய உர உற்பத்தி நிறுவனமும் உரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும்.

3.9.2 விவசாயிகள் சுற்றாடல்நேய நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கும் போது,

3.9.2.1 கமநல சேவை நிலையத்திற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பெற்றுத் தரப்படுகின்ற விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மேற்குறித்த 2.1 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உர சிபாரிசுகளின் பேரில் விவசாயிகளுக்கு உரங்களை விநியோகிக்க வேண்டும்.

3.9.2.2 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / கிராம உத்தியோகத்தர்கள்/மகாவலி பிரிவு முகாமையாளர்கள் ஆகியோர் தமது கிராம

உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலின் ஒரு மென்பாகப் பிரதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.9.2.3 அந்தப் பெயர் பட்டியலில் எவரேனும் விவசாயி ஒருவருக்குரிய நிரலின் வலது பக்கத்தில் விவசாய காலநிலை வலயம், பயிரிடப்படும் காணிகளின் அளவுகள், தேவைப்படும் உரங்களின் அளவுகள் முதலிய விபரங்களைப் பதிந்து கொள்வதற்காகவும், விவசாயினது கையொப்பத்தை / பெருவிரல் அடையாளத்தை இடுவதற்காகவும் இடைவெளி ஒதுக்கப் பட்டுள்ளது.

3.9.2.4 சுற்றாடல்நேய உரங்களை பெற்றுக் கொள்ளும் விவசாயிகளின் விபரங்கள் அடங்கிய ஒரு பட்டியலின் செவ்வையை கள ரீதியான குழு உத்தியோகத்தர்கள் கையொப்பமிட்டு சான்றுபடுத்த வேணடும்.

3.9.2.5 சுற்றாடல்நேய நிவாரண உரங்களை பெறுவதற்கு தகுதியுடைய விவசாயிகளை சிபாரிசு செய்ய நியமிக்கப்படும் குறித்த கள ரீதியான குழுவில் விவசாய ஆலோசகர்கள், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள், கமநல சேவை நிலையங்களுக்கு இணைக்கப் பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமக்காரர் அமைப்புகளின் தலைவர்கள் / செயலாளர்கள் ஆகியோர் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

3.9.2.5.1 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் இல்லாத பிரதேசங்களில் அந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு பதிலாக கிராம உத்தியோகத்தர் ஒருவரை அல்லது பிற உத்தியோகத்தரை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நியமிக்க வேண்டும்.

3.9.2.5.2 மகாவலி அதிகாரப் பிரதேசங்களாயின் மேற்குறித்த 3.9.2.5 இல் குறிப்பிடப் பட்டுள்ளவாறு கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக மகாவலிப் பிரிவு முகாமையாளர்களையும் குறித்த களரீதியான இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக உள்ளடக்க வேண்டும்.

3.9.2.6 எவரேனும் விவசாயி ஒருவர் சுற்றாடல்நேய நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கின்ற போது மேற்குறித்த பெயர் பட்டியலில் அந்த விவசாயி பற்றிய விபரங்களை சரியாக உள்ளடக்கிய பின்னர் அந்த விவசாயின் கையொப்பத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.9.2.7 மேற்குறித்த 3.9.2.5 இல் கள ரீதியான உத்தியோகத்தர் பெற்றுத்தரும் விபரங்களை கமநல சேவை நிலையத்திலுள்ள கணனியில் உள்ளீர்க்க வேண்டும்.

3.9.2.8 உரிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள், விவசாயிகள் உரங்களை பெற்றுக் கொள்ளத் தேவையான பெறுகை அட்டையை உரிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அந்த பெறுகை அட்டையை உரிய கமநல சேவை நிலையத்திற்கு அல்லது விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு ஒப்படைத்ததன் பின்னர் அவர்களுக்கு தேவையான சுற்றாடல்நேய உரங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு இலவசமாக உரங்களை விநியோகிக்கும் போது இலக்கங்களுடைய முறையான ஒரு பெறுகை அட்டையை பெற்றுக் கொடுத்து, 01 ஆம் அட்டவணையில் விவசாயின் கையொப்பத்தை பெற்றுக்கொண்டு திகதியையும் குறித்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளகள்/அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் அது பற்றி சான்றுபடுத்த வேண்டும்.

3.9.2.9 மேலே உள்ள 3.9.2.7. இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை ஒவ்வொரு மாத இறுதியிலும் தரவுகள் முறைமையில் உள்ளீர்க்கும் பொருட்டு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். அந்தந்த மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்கள் ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தை பரிசீலித்து உரிய மாதம் முடிவடைந்து பத்து (10) நாட்களுக்குள் தரவுகள் முறைமையினுள் உள்ளீர்க்க வேண்டும். அவ்வாறு அந்த உரிய முறையில் விபரங்களை பெற்றுத் தராத கமநல சேவை நிலையங்களை இனங்கண்டு மாவட்ட கமநல அபிவிருத்திப் பிரதி/உதவி ஆணையாளர்கள் தேவையானவாறு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். தேவையாயின், உரிய விபரங்களை பெற்றுத் தரும் வரை உரிய கமநல சேவை நிலையத்திற்கு உரங்களின் பகிர்ந்தளிப்பை தற்காலிகமாக இடைநிறுத்தவும் முடியும்.

3.9.2.10 குறித்த தரவுத் தளத்தினுள் இது வரை உள்ளீர்க்கப்படாத விவசாயிகள் சுற்றாடல்நேய நிவாரண உரங்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அந்த விவசாயிகளின் விபரங்களை புதிதாக தரவுகள் முறைமையினுள் உள்ளீர்க்க முடியும் என்றாலும் கூட, அவ்வாறு செய்வதற்கு முன்னர் உரிய விவசாயிடமிருந்து உரத்திற்கான விண்ணப்பப் படிவத்தை (அட்டவணை 1 இற்கு இணங்க) பெற்றுக் கொண்டு அவர் நிவாரண உரங்களை பெறுவதற்கு தகுதியுடையவர் என மேற்குறித்த கள ரீதியான குழுவினது சிபாரிசின் பேரில் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர் தனது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

3.9.2.11 புதிய விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை மாவட்ட கமநல அபிவிருத்தி பிராந்திய ஆணையாளர்களின் / உதவி ஆணையாளர்களின் சிபாரிசுகளுடன் தரவுகள் முறைமையினுள் உள்ளீர்க்க வேண்டும்.

3.10 சுற்றாடல்நேய உர நிவாரணத்தின் அடிப்படையில் உரங்களை பெற்றுக் கொள்ள உரித்துடைய விவசாயிகள் பற்றிய தகவல்களை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் அல்லது அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்படாதுள்ள பிரதேசங்களில் உரங்கள் பகிர்ந்தளிப்பு ஒருங்கிணைப்பின் நிமித்தம் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

3.11 நெற் பயிருக்கான உர சிபாரிசுகளின் பிரகாரம் சுற்றாடல்நேய உரங்களுக்கு விண்ணப்பிக்கப்படுதல் மற்றும் விவசாயிகள் சரியான அளவு உரங்களை பெற்றுக் கொண்டு நெற் பயிருக்கு இடப்படுதல் முதலிய விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை விவசாய ஆலோசகர்கள் /விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் கட்டாயம் செயற்படுத்த வேண்டும்.

3.12 சுற்றாடல்நேய உரங்களுக்காக விவசாயிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்களின் செவ்வைத் தன்மையை பரிசீலித்து, உறுதிப்படுத்திக்கொண்டு குறித்த அந்த விவசாயிகளின் பெயர்கள், பயிரிடப்படுகின்ற வயல் காணிகளின் பெயர்கள் மற்றும் பயிரிடப்படும் அளவுகள் மற்றும் அந்தக் காணிகளுக்கு உரித்துடைய உரங்களின் அளவுகள் முதலிய விபரங்கள் (தேர்ந்தெடுத்த உற்பத்தி தரப்புகளின் உரங்கள்) அடங்கிய ஒரு பட்டியலை அந்தந்த அதிகாரப் பிரதேசத்திற்கான குறித்த விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் அல்லது அத்தகைய உற்பத்தி உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத பிரதேசங்களில் உரிய உத்தியோகத்தர்கள் தயாரித்து கிராம உத்தியோகத்தரின் அலுவலகம் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளரின் அலுவலகம், கமக்காரர் அமைப்புகளின் தலைவர்களினது இல்லங்கள் அல்லது அலுவலகம் மற்றும் மகாவலி பிரதேச வலய முகாமையாளரின் அலுவலகம் போன்ற இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும்.

3.13 இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பற்றி பொது மக்கள் செய்யும் முறைப்பாடுகளை விசாரித்து, செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்கள், விவசாய ஆலோசகர்கள் மற்றும் மகாவலிப் பிரதேச பிரிவு முகாமையாளர்கள் ஆகியோர் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.14 மகாவலி அதிகார பிரதேசங்களில் சுற்றாடல்நேய நிவாரண உரங்களை பெறுவதற்கு உரித்துடைய விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலை, விவசாயினது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், வயல் காணி அளவுகள் (ஹெக்டேயர்களில்), வயல் காணிகளின் அமைவிடங்கள் என்பவற்றை நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடிய விபரங்கள், விவசாயினது தொலைபேசி இலக்கம், உரிய உரங்களின் அளவுகள் என்பன உள்ளடங்கும் வகையில் மகாவலி வயல முகாமையாளர்கள் தயாரித்து தமது கையொப்பங்களையும் மற்றும் அலுவலக முத்திரையையும் இட்டு, அதன் செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் முகமாக குறித்த மகாவலிக் கோட்டப் பிரிவுக்குரிய முகாமையாளரினதும் கையொப்பத்தை பெற்ற பின்னர் அலுவலக முத்திரையை இடச்செய்து உரிய கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதே போல் அந்தப் பெயர் பட்டியலின் பிரதிகளை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்திற்கும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தினது பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கவும் வேண்டும்.

## 4 நிவாரண அடிப்படையில் சுற்றாடல்நேய உரங்களை பகிர்ந்தளிக்கும் போது அதன் நிமித்தம் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை உபயோகித்தல்

4.1 மேற்குறித்தவாறு சுற்றாடல்நேய உரங்களை பகிர்ந்தளிக்கும் தேசிய திட்டம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் சுற்றாடல்நேய உரத்திற்கான மாவட்ட செயல் குழுவினதும் மற்றும்

தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளரினதும் உடன்பாட்டுடன் தயாரித்து வெளியிடப் படும். அந்த திட்டத்தை www.aginfo.agrimin.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரசுரிக்க வேண்டும்.

4.1.1 இந்த உரங்கள் பகிர்ந்தளிப்பு திட்டத்தை தயாரிக்கும் போது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அந்தந்த கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களில் விளைச்சல்கள் செய்யப்பட்டுள்ள முழுமையான வயல் காணிகளின் அளவுகளை விஞ்ஞாத வகையில் தயாரித்துக்கொள்ள வேண்டும். புதிதாக விளைச்சல் செய்ததன் காரணமாக முழுமையான வயல் காணிகளின் அளவுகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் அதன் நிமித்தம் கமநல ஆணையாளர் நாயகத்தின் முன்கூட்டிய அனுமதியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.2 உரங்களை பகிர்ந்தளிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டத்தை மாவட்டத்தினுள் முறையாக செயற்படுத்தும் பொறுப்பு சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழுவுக்கு சாட்டப்படுகின்றது. அதன் போது,

4.2.1 நெற் பயிர்ச் செய்கைப் போகக் கூட்டங்களின் போது எடுத்த தீர்மானங்களிலிருந்து விலகி செயல்படுகின்ற விவசாயிகளும் மற்றும் இரண்டு ஹெக்டேயர்களுக்கு அதிகம் நெல் பயிரிடும் விவசாயிகளும் பயிர் செய்கை போக கூட்டங்களில் எடுத்த தீர்மானங்களின் பிரகாரம் வயல் காணிகளில் ஏனைய பயிர்களை பயிரிடும் விவசாயிகளும் திறந்த சந்தை விலையில் உரிய உரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 5 சுற்றாடல்நேய உரங்களின் தர நியமங்கள் கட்டுப்பாடு

5.1 1988 இன் 68 ஆம் இலக்க உர ஒழுங்குறுத்துகை சட்டத்தில் உரம் என்பது 'அங்கீகரிக்கப்பட்டுள்ள தாவர போஷனை ஒன்று அல்லது அதற்கு அதிகமான தாவர போஷனைகள் அடங்கிய தாவர போஷனை உள்ளடங்கியிருப்பதன் காரணமாக பாவிக்கப்படும் தாவரங்களின் வளர்ச்சிக்கு பாவிப்பதற்கான நோக்கமுடைய, இல்லையெனில் அதற்கான ஒரு பெறுமானத்தையுடையது என சொல்லப்படுகின்ற ஏதாவது ஒரு பதார்த்தம்' எனப் பொருள்படும் .'சுத்திகரிக்கப்படாத விலங்கு அல்லது தாவர உரங்கள்' இதில் உள்ளடங்காது.

5.2 சுற்றாடல்நேய உரங்களை, அடிப்படை ரீதியில் மூன்று வகைகளாக இனங்காண முடியும் அதாவது . திண்ம சேதன உரம், திரவ சேதன உரம் மற்றும் உயிரியல் .உரம் என்பனவாகும் (உயிர்)

5.2.1 திண்ம சேதன உரம் என்பது தாவரத்தின் வளர்ச்சியை அல்லது அதன் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவும், ஒன்று அல்லது அதற்கு அதிகமான தாவர போஷனைகள் அடங்கிய, தாவரப் பாகங்கள் அல்லது விலங்கு பாகங்கள் அல்லது இயற்கை கனிப்பொருட்கள் அல்லது இவற்றில் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு அதிகமானவை உள்ளடங்கிய, பொதீக செயல்-முறையால் சிதைந்த மண் வளத்தை அல்லது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற ஒரு பதார்த்தம் எனப் பொருள்படும்.

5.2.2 திரவ உரம் என்பது தாவரத்தின் வளர்ச்சியை அல்லது உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உதவும், ஒன்று அல்லது அதற்கு அதிகமான தாவர போஷனைகள் உள்ளடங்கிய, தாவரப் பாகங்கள் அல்லது விலங்குப் பாகங்கள் அல்லது இவற்றில் ஒன்று அல்லது அதற்கு அதிக செரிமான செயல்முறைக்கு உட்படுகின்ற மற்றும் புரத ஹைட்ரஷலேட்டு (Protine Hydrolysate) தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற திரவ உரம் எனப் பொருள்படும்.

5.2.3 உயிரியல் உரம் என்பது ஒரு திண்ம அல்லது விஷேட கரைசலை பயன்படுத்தி அதில் அடங்க வேண்டிய விவசாயத்திற்கு பயனுள்ளதாக புவிமண்டல நைதரசனை நிரல்படுத்தி, மண்ணில் காணப்படும் பொசுபரஸை அல்லது மண்ணிலுள்ள போஷனை பதார்த்தங்களை தாவரங்கள் உருஞ்சக்கூடிய வகையில் மாற்றுதல் முதலிய செயற்பாடுகளுக்குப் பயன்படும் மண்ணின் அல்லது தாவரங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு பயன்படக் கூடிய உயிரியல் நிலையிலுள்ள ஒரு உற்பத்தி எனப் பொருள்படும்.

5.3 உள்நாட்டு உற்பத்தித் தரப்புகள் உற்பத்தி செய்கின்ற சுற்றாடல்நேய உரங்களுக்கு இடையில் கொம்போஸ்ட்டு உரம் மற்றும் திரவ சேதன உரம் ஆகிய உரங்களுக்கு இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் நிர்ணயித்து பிரகடனப்படுத்தியுள்ள தர நியமங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் நைதரசன் தொடர்பாக சிபாரிசு செய்துள்ள ஆகக்குறைந்த விகிதம், அந்த உரத்தின் நிமித்தம் விவசாய பணிப்பாளர் நாயகம் அனுமதித்துள்ள ஆகக்குறைந்த சிபாரிசின் பிரகாரம் 1.5% வீதம் என மாற்றப்பட்டு பிரயோகிக்கப் படுகின்றது. உயிரியல் உரத்திற்கு 2022 சிறுபோகத்தின் கொள்வனவின் போது பின்பற்றப்பட்ட தர நியமங்கள் பிரயோகிக்கப்படும். விஷேட உரங்கள் நிமித்தம் இலங்கை தர

நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் முன்வைத்துள்ள பொது மக்கள் கருத்துரைகள் பற்றிய தர நியம வரைவு பிரயோகிக்கப் படும்.

I. கொம்போஸ்ட்டு உரம் - இலங்கைத் தர நியமம் 1635:2019 (அட்டவணை 04)

II. திரவ சேதன உரம் - இலங்கைத் தர நியமம் 1702:2021 (அட்டவணை 05)

III. உயிரியல் உரம் - நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களை விநியோகிப்பதற்கான கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தர நியமங்கள் (அட்டவணை 06)

IV. விஷேட உரங்கள் - இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் முன்வைத்துள்ள உரியவாறு பிரயோகிக்கப்படும் பொது மக்கள் கருத்துகைள் பற்றிய தர நியமங்கள் வரைவு (அட்டவணை 07)

5.4 பகிர்ந்தளிக்கப்படுகின்ற உரங்கள் மேற்குறித்த தர நியமங்களை அனுசரிக்கின்றனவா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு கமநல அபிவிருத்தி திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்அதற்கு அமைய ., உரிய உரங்களின் அளவுகளை பகிர்ந்தளிக்க முன்னர் ஒவ்வொரு உரத் தொகுதிக்கும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் வழங்கும் அனுசரிப்பு சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கும் கமநல அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்தேசிய . உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் வழங்கும் ஒரு அனுசரிப்பு சான்றிதழ் இன்றி எந்த ஒரு உரத்தையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

5.5 சுற்றாடல்நேய உரங்களின் தர நியமங்களை கட்டுப்படுத்துவது பற்றி அந்தந்த நிறுவனத்தின் / சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழுவின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

5.5.1 தேசிய உர செயலக அலுவலகம்

5.5.1.1 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் கீழ் அனுமதிப் 68 இன் 1988 பத்திரம் பெற்ற சுற்றாடல்நேய உர உற்பத்தித் தரப்புகளுக்கு அந்த அனுமதிப் பத்திரங்களின் மூலம் உர உற்பத்தி நிமித்தம் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன .சுற்றாடல்நேய உர உற்பத்திகளின் தர நியமங்களை தொகுதி வாரியாக பரிசீலிப்பதும் அந்தத் தொகுதிகளுக்குரிய அனுசரிப்பு சான்றிதழ்களை வழங்குவதும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பொறுப்பாகும்.

5.5.1.2 எனவே, அந்த அனுசரிப்பு சான்றிதழ் இல்லாத எந்த ஒரு சுற்றாடல்நேய உரத் தொகுதிக்கும் உரங்களை கமநல அபிவிருத்தி திணைக்களம் கொள்வனவு செய்யக் கூடாதுசந்தையில் ., அந்த அனுசரிப்பு சான்றிதழ் இல்லாத சகல உரங்களையும் தரம் குறைந்த உரங்கள் எனக் கருதி ஆம் இலக்க உர ஒழுங்குறு 68 இன் 1988த்துகை சட்டத்தின் 15,16,21 மற்றும் 22 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தேசிய உர செயலக அலுவலகத்தின் கீழ் மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

5.5.1.3 மேலும், உதவிப் பணிப்பாளர்கள், அனுமதிப் பத்திரம் பெற்ற சுற்றாடல்நேய உர உற்பத்தித் தரப்புகளினது உரங்கள் தொகுதி உற்பத்தி செய்யப்பட்டு முடிவடைந்துள்ளது என குறித்த அந்தத் தரப்புக்கு அறிவித்ததும் தாமதியாமல் அந்த உற்பத்தியின் மாதிரிகளை, 68 இன் 1988 (2)12 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைத் தர நிமயங்கள் கட்டளைகள் நிறுவகத்தினால் நிர்ணயிக்கப்பட்டு, பிரகடனப்படுத்தப் பட்டுள்ள மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படும் முறையியலை பின்பற்றி, உரிய உற்பத்தி ஸ்தலத்தில், உற்பத்தித் தரப்பினது முன்னிலையில் பெற்றுக் கொள்ள வேண்டும்அந்த . மாதிரியை உரிய முறையில் பொறியிட்டு தேசிய உர செயலக அலுவலகத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி உரிய முறையில் உற்பத்தித் தரப்பின் / உற்பத்தித் தரப்பின் அதிகாரம் பெற்ற ஊழியரின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு, கையொப்பதை பெற்றுக்கொண்டு, உரிய முறையில் உதவிப் பணிப்பாளரினதும் கையொப்பமும் மற்றும் அலுவலக முத்திரையும் இடப்பட்டு தாமதியாது தேசிய உர செயலக அலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்க அல்லது நேரடியாக வந்து ஒப்படைக்க வேண்டும் அந்தந்த உரத் தொகுதிற்கு என பெற்றுக் . கொள்ளப்பட்ட மாதிரிகளுக்கு பொறியிடப்படும் மாதிரி வீதம் குறித்த உற்பத்தித் தரப்புக்கு

தேவையான சந்தர்ப்பங்களில் பரிட்சித்துப் பார்ப்பதற்கு பெற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5.5.1.4 அத்தகைய மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கைகளை ஏழு வேலை நாட்களுக்குள் உரிய இரசாயன கூடங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு முறையான ஒரு வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கு தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் நடவடிக்கையை எடுக்க வேண்டும்உற்பத்தித் தரப்பிடமிருந்து மாதிரிகளை பெற்றுக் கொண்டு ப .த்து வேலை நாட்களுக்குள் குறித்த பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரதிகளுடன் சேர்த்து அனுசரிப்பு சான்றிதழை, உற்பத்தித் தரப்புக்கு விநியோகிக்க வேண்டும். உயிரியல் உர உற்பத்திகளின் தர நியமங்களை உறுதிசெய்துகொள்வதற்காக உர உற்பத்தி தரப்புகள் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதன் நிமித்தம் சிபாரிசுகளை பெற்றுக் கொடுக்கும் போது மாவட்ட உதவி பணிப்பாளர் உரிய உற்பத்தி தரப்புக்கு உரிய ஆய்வுகூட விடயங்கள் மற்றும் தகுதி பெற்ற மனித வளங்கள் உடைய ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆய்வுகூட வசதிகள் காணப்படுவதாக சான்றுபடுத்த வேண்டும்.

5.5.1.5 உயிரியல் உரத்திற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நைதரசன் நிரல் பற்றீரியா $1x10^7$ கல அளவு ஒரு மில்லி லீற்றராக இருத்தல் மாத்திரமே கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும். வினைத்திறன் பண்பு ரஜரட்டை பல்கலைக்களகத்தின் மூலம் உறுதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும். கல அளவு ஏற்புடையதாகுகின்ற போது முதலாவது கொடுப்பனவை முழு அளவில் 60% வீதத்திற்கு மாத்திரம் மேற்கொள்ளலாம். இது பற்றிய பிரச்சினைக்குரிய அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமான வேண்டுகோளை கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.5.1.6 அனுமதிப் பத்திரம் பெறாத உற்பத்தித் தரப்புகள் உற்பத்தி செய்கின்ற எந்த ஒரு உர உற்பத்தியையும் சந்தையில் விற்பனை செய்வதற்கு எந்த விதத்திலும் இடமளிக்காத வகையில் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும்அத்தகைய . உரங்களின் விற்பனையைத் தவிர்த்துக் கொள்ளவதற்கு குறித்த உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளரின் பொறுப்பு உதவிப் பணிப்பாளர்களுக்கு சாட்டப்படுகின்றது.

5.5.1.7 எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தர நியமங்களை அனுசரிக்காத உரங்களை நெற் பயிருக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் தேசிய உர செயலக அலுவலகம் அனுசரிப்பு சான்றிதழை விநியோகிக்க கூடாது. குறித்த அந்த தர நியமங்களுக்கு ஏதாவது வித்தியாசம் காணப்படுகின்ற ஒரு தொகுதி இருப்பதாக தெரிய வந்த உடனே, உர ஆலோசனை குழுவுக்கு சமர்ப்பித்து அதன் சிபாரிசுகளை அமைச்சுக்கு அனுப்பி வைத்து, அமைச்சின் ஆலோசனைகளின் போில் செயல்படுதல் வேண்டும்.

5.5.2 கமநல அபிவிருத்தித் திணைக்களம்

5.5.2.1 ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தரத்தில் உயர்ந்த உரங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

5.5.2.2 கமநல சேவை நிலையத்திற்கு சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகளிடமிருந்து கிடைக்கும் உரங்களுக்கு உரிய நியம அனுசரிப்பு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது என்பதை கமநல பிராந்திய உத்தியோகத்தர்களும், உரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களும் அறிந்திருக்க வேண்டும் .

5.5.2.3 கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்படுகின்ற சுற்றாடல்நேய உரங்களின் பாவனை பற்றிய ஒட்டுமொத்த கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

i. பயிர்ச் செய்கைப் போகத்தின் ஆரம்பத்தில் கமக்காரர் அமைப்புகள் கூட்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டு உரிய போகத்தின் பயிர்ச் செய்கை சார்ந்த செயற்பாடுகள் பற்றிய தகவல்களை சேகரித்தல்.
    1. உதாரணம் - நெல் பயிரிடும் விவசாயிகளின் எண்ணிக்கை
        a. நெல் பயிரிடப்படவுள்ள ஹெக்டேயர்களின் எண்ணிக்கை

ii. மேலே சேகரித்த சரியான மற்றும் உண்மையான தகவல்களை உரிய கமநல சேவை நிலையங்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.
iii. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் (.உ.உ.ஆ.வி) தன் பிரிவுக்கு உரிய சுற்றடால்நேய உரங்கள் உற்பத்தி மற்றும் பாவிக்கும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகியவற்றின் நிமித்தம் தேவையான விண்ணப்பப் படிவங்களையும் மற்றும் உரிய தகவல்களையும் கமநல நிலையங்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.
iv. சுற்றாடல்நேய உர வகைகளை பெற்றுத் தரும் உள்நாட்டு உர உற்பத்தி தரப்புகள் உரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்பு உரிய உர வகைகளை உரிய கமநல சேவை நிலையங்களுக்கு அல்லது வி.உ.உ.ஆ. பிரிவுகளுக்கு அத்தகைய தரப்புகளே எடுத்துச் சென்று விநியோகிக்க வேண்டும்.

    1. அவ்வாறு, கமநல சேவை நிலையங்களுக்கு எடுத்துவரப்படும் உரங்களை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் தமது வி .ப.உ.ஆ. பிரிவுகளுக்குரிய கமக்காரர் அமைப்புகளின் ஊடாக விவசாயிகளுக்கு .பகிர்ந்தளித்தல்
    2. வி பிரிவுகளுக்கு எடுத்து .பி.உ.ஆ.வந்த அந்த உரங்களை உரிய பிரிவுக்கு பொறுப்புடைய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பொறுப்பேற்ற பின்னர் மேற்குறித்தவாறு அந்த உரங்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல்.

v. உரங்களை பகிர்ந்தளிப்பது பற்றிய ஆவணங்களையும் தரவு அறிக்கைகளையும் பேணி அந்த தகவல்களை உரிய கமநல சேவை நிலையங்களுக்கு சமர்ப்பித்தல்.

5.5.3 விவசாயத் திணைக்களம்

5.5.3.1 சகல உள்நாட்டு உற்பத்தித் தரப்புகளினதும் உரங்களை பத்தலகொட, பரந்தன் மற்றும் போம்புவெல ஆகிய ஆய்வுகூடங்களில் கள ரீதியான பரிசோதனைகளுக்கு அனுப்பி அந்த உரங்களின் பயனும் மற்றும் வினைத்திறனும் தொடர்பான சிபாரிசுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

5.5.3.2 விவசாயத் திணைக்களத்தின் விவசாய ஆலோசகர்களுக்கு சுற்றாடல்நேய உரங்களின் பாவனை தொடர்பாக சாட்டப்படும் கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

- விவசாயத் தொழில் நுட்பத்தை பகிர்ந்தளித்து, மனித வள முகாமைத்துவம் மற்றும் பல பிரிவுகள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து தனது அதிகார பிரதேசத்தில் விவசாயத் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கும், தொழில்முயற்சியாளர்களுக்கும், ஏனைய உரிய தரப்புகளுக்கும் பெற்றுக் கொடுப்பது அவசியமாகும்.

i. விவசாய பணிப்பாளர் நாயகத்தால் 2022/23 பெரும்போகத்திற்கு வழங்கப்பட்டுள்ள உர சிபாரிசுகள் பற்றி விவசாயிகளுக்கு விழிப்பூட்டுதல், பயிற்சி அளித்தல் மற்றும் அது பற்றி விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கும் மற்றும் ஏனைய தரப்புகளுக்கும் விழிப்பூட்டுதல்.
ii. பசுமை விவசாயத்திற்கு கள ரீதியான முன்மாதிரி, கள தினங்களை நடத்துதல்.
iii. பயிர்ச் செய்கைப் போகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி மாகாண விவசாய / மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்களுக்கு அறியப்படுத்தி மேலும் உரியவாறு நடவடிக்கைகளை எடுக்க தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
iv. விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் / மாகாண விவசாயப் பணிப்பாளர்களினால் / பிரதி விவசாயப் பணிப்பாளர்களினால் பசுமை விவசாயம் பற்றி காலத்திற்கு ஏற்றவாறு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற தகவல்களை கள ரீதியில் செயற்படுத்த நடவடிக்கை எடுத்து, விவசாயிகளை ஈடுபடுத்துதல்.

5.5.4 சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழு

5.5.4.1 சுற்றாடல்நேய உரங்களை நெற் பயிருக்கு பெற்றுக் கொடுக்கும் போது அந்தந்த மாவட்டத்திற்கு தேவையான சுற்றாடல்நேய உரங்களின் அளவுகளை முடியுமான வரையில் அந்த மாவட்டத்தினுள் பெற்றுக் கொள்வதற்கும், அந்தந்த மாவட்டத்தின் உர உற்பத்திகளின் தர நியமங்களை மேலும் மேம்படுத்துவதற்கும், உரிய கால நேரத்திற்கு

விவசாயிகளுக்கு உரங்களை பெற்றுக் கொடுக்கும் இலக்கை அடைவதற்கும் உரிய விடயத்திற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர் குழு கண்காணிப்பதற்கும், பின்னூட்டல் செய்வதற்கும், ஒரு உர உற்பத்திக் குழுவாக ஒன்றுசேர்த்து மாவட்டத்தின் உர தேவையை பூர்த்தி செய்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கும், படிப்படியாக சேதன உரங்களை சான்றுபடுத்திக் கொள்வதற்கு சான்றுபடுத்தல் சேவை நிலையத்திற்கு உர உற்பத்தித் தரப்புகளை குறிப்பீடுசெய்வதற்கும் என்ற நோக்கில் இந்தக் குழு தாபிக்கப் படும்.

5.5.4.2 இந்த சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழு மாவட்ட செயலாளரின்/ அரசாங்க அதிபரின் பங்குபற்றலில், மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள், பிரதி / உதவி கமநல ஆணையாளர்கள், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் தேசிய உர செயலக அலுவலகத்தின -தும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பசுமை விவசாய செயற்பாட்டு நிலையத்தின் உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருக்கும்.

மாகாணங்களுக்கு இடையில் இந்தக் குழுவில் மாகாணங்களுக்கு இடையிலான பிரதி விவசாயப் பணிப்பாளர்களும் அடங்கும் வகையில் மேலும் மகாவலி வலயங்களினது முகாமையாளர்களும் உள்ளடங்குவார்கள்.

5.5.4.3 சுற்றாடல்நேய மாவட்ட உர செயல் குழுவின் பொறுப்புப் பணிகள்

5.5.4.3.1 மாவட்டத்திற்கு உரங்களை பெற்றுக் கொடுக்கும் முகமாக விருப்பம் தெரிவித்த சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகளுக்கு இடையில் பொருத்தமான உற்பத்தி தரப்புகளை தேர்ந்தெடுக்க விவசாயிகளிடம் போதியளவு அறிவில்லாததால் உரிய கமநல சேவை நிலையத்திற்கு உரங்களை பெற்றுக் கொடுக்க உரிய உகந்த பொருத்தமான உற்பத்தி தரப்புகளை தேர்ந்தெடுத்து சிபாரிசு செய்தல். அவ்வாறு சிபாரிசு செய்யும் போது,

- உற்பத்தி தரப்பும் உற்பத்திகளும் சம்பந்தமாக முன்னைய பயிர்ச் செய்கை போகங்களில் பெற்ற அனுபவத்தை கருத்திற்கொள்ளல்.
- உற்பத்தி தரப்புக்கு சொந்தமான தேசிய உர செயலக அலுவலகம் அனுமதி அளித்த, போதியளவு உரங்கள் இருக்கின்றனவா என தேடிப்பார்த்தல்.
- உற்பத்தி தரப்பிடமுள்ள அதன் உற்பத்திற்கு சர்வதேச ரீதியில் அங்கீகரித்த ஒரு சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் (அவ்வாறு சான்றிதழ் உள்ள போதியளவு உரங்களை வைத்திருக்கும் உற்பத்தி தரப்புகளுக்கு முன்னுரிமை அளித்தல்)
- விவசாய திணைக்களம் சிபாரிசு செய்த ஒரு உற்பத்தியாக இருத்தல்.
- ஒரு அரச நிறுவனத்தின் உற்பத்தியாக இருத்தல்.
- உரிய மாவட்டத்தின் கமநல சேவைப் பிரிவில் விவசாய திணைக்களத்தின் வழிகாட்டல் அடிப்படையில் கள ரீதியான பரிசோதனைகளை மேற்கொண்டு வெற்றிகரமான முடிவுகளை பெற்ற சுற்றாடல்நேய உற்பத்தியாக இருத்தல்.
- 5.5.1.4 மற்றும் 5.5.1.5 ஆகியவற்றின் பிரகாரம் உயிரியல் உரம் சம்பந்தமாக வருகின்ற போது ஆய்வுகூட வசதிகள் உள்ளமைக்கான ஒரு சான்றிதழும் மற்றும் வினைத்திறன் பண்பு பற்றிய ஒரு உறுதிப்பாடும் இருத்தல்.

மேற்குறித்த கரும விடயங்களை கருத்திற்கொண்டு சுற்றாடல்நேய உர உற்பத்தி நிறுவனம், விவசாயிகளை தேர்ந்தெடுப்பதை இலகுபடுத்தும் முகமாக சிபாரிசு செய்வதற்குரியமாவட்ட செயலாளரின்/அரசாங்க அதிபரின் தலைமையில் உள்ள சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழுவால் நடவடிக்கையை எடுக்கச்செய்வது பொருத்தமானதாகும்.

5.5.4.3.2 **குறிப்பாக தமது மாவட்டத்தினுள் உற்பத்தி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் விநியோகத்தை வினைத்திறன் வாய்ந்ததாக மேற்கொள்ள முடியும் என சுட்டிக் காட்டப்படுகின்ற அதே வேளையில் உரிய உற்பத்தி ஆற்றல் இல்லாத அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தமது உற்பத்தி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படாத உற்பத்திகளை இடைத்தரகராக செயல்பட்டு உரிய அனுமதிப் பத்திரம் பெறாத உற்பத்தி தரப்புகளிடமிருந்து விலை கொடுத்து வாங்கி விவசாயிகளுக்கு பெற்றுக்**

**கொடுப்பதற்கு எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் தடுப்பதற்கு நடவடிக்கையை எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.** அதற்காக அந்த உற்பத்தி தரப்புகளின் உற்பத்தி கொள்திறனை, உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு சென்று அவதானிப்பதற்கான ஒரு வேலைத் திட்டத்தை சுற்றாடல்நேய உர மாவட்ட செயல் குழு செயற்படுத்த வேண்டும். உரங்களின் தரத்தை அதிகம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவ்வப்பொழுது பகிர்ந்தளித்த உரங்களின் மாதிரிகளை தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர்களின் மூலம் பெற்றுக்கொண்டு மாவட்ட செயலக அலுவலகத்தில் இலக்கமிட்டதன் பின்னர் தேசிய உர செயலக அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன் மூலம் அந்த மாதிரிகளின் சோதனைகள் சார் அறிக்கைகளை கேட்டு பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகளை செய்யும் போது, தேசிய உர செயலக அலுவலகத்தின் மூலம் ஒவ்வொரு தொகுதிக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கையை ஒப்பிட்டு, பகிர்ந்தளித்த அந்த உற்பத்திகளில் இருக்கும் போஷனை பதார்த்தங்களில் பாரிய ஒரு வித்தியாசம் நிகழ்ந்திருக்குமாயின், அதை அவதானித்து கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- **இந்த செயல்முறையின் போது உற்பத்தி தரப்புகளினது உற்பத்திகளின் தரங்கள், விலைகள், உற்பத்திகளின் அளவுகள் என்பவற்றின் அடிப்படையில் உருவாகுகின்ற போட்டியின் ஊடாக அதிக நன்மைகளை விவசாயிகள் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதால் அதிக போட்டிற்கு இடம் அளிக்க வேண்டும்.**

5.5.4.3.3 சுற்றாடல்நேய உரங்களின் சரியான பாவனை தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்பூட்டும் பொருட்டு உர விநியோக தரப்புகளையும், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களையும் கமநல சேவை நிலையங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களையும் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.5.4.3.4 மாவட்டத்திலுள்ள சேதன உர உற்பத்தித் தரப்புகள் இலங்கை SLS தர நியம சான்றிதழையும், GMP சான்றிதழையும் (Good Manufacturing Practices) பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

5.5.4.3.5 இது தவிர, சுற்றாடல்நேய உர உற்பத்தி சேதன சான்றிதழை பெற்றிருக்கின்ற ஒரு நிறுவனத்தின் மூலம் சான்றுபடுத்தலின் நிமித்தம் குறிப்பீடு செய்து, அந்த சேதன உரங்களை பாவித்து பயிரிடப்படும் துறைகளை இனங்கண்டு, அந்த விவசாயிகளை குழுக்களாக ஒழுங்கமைத்து, சுற்றாடல்நேய உற்பத்திகளை சேதன சான்றுபடுத்தல் செயல்முறை வரை கொண்டுசெல்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடனும் இலங்கை சான்றுபடுத்தும் சபையுடனும் இணைந்து செயல்படும் முகமாக கவனத்தை செலுத்தி அந்த உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைகள் வரை அறிமுகப்படுத்துதல்.

5.5.4.3.6 அதே போல் மண்ணில் காணப்படும் சேதன பதார்த்தங்களின் அளவுகளையும் பொசுபரஸின் அளவுகளையும் மற்றும் சேதன உரங்களை பாவித்து நெல்லைப் பயிரிடும் போது மிகவும் கவனமாக பரிசீலித்துப்பார்க்க வேண்டும் . ஆகையால், விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து நெல் வயல் தொகுதி மட்டத்தில் மண் வளத்தை பரிசோதிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், அந்த பெறுபேறுகளை வெளியிடுதல், அதன் பிரகாரம் உரங்களை பாவிப்பது பற்றிய அறிவுரைகளை விவசாயிகளுக்கு வழங்குதல் ஆகியவற்றுக்கான ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரித்தல்.

5.5.4.3.7 முன்னேற்ற மீளாய்வும் பின்னூட்டும் செயற்பாடுகளும்

2022/23 பெரும்போகத்தின் போது மாவட்டத்திற்கு தேவையான சுற்றாடல்நேய உர வகைகளும் அளவுகளும் போதுமானதாகவுள்ளனவா என தேடிப்பார்த்து அத்தகைய தேவைப்பாடுகளை உர விநியோகத் தரப்புகளின் மூலமாக பூர்த்தி செய்து கொள்ளவும் மற்றும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் உரிய முறையில்

நிகழ்கின்றனவா என தினமும் தேடிப்பார்த்து குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளவும், தீர்க்க இயலாதுள்ள பிரச்சினைகளை கமத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கு குறிப்பீடு செய்தவற்கும் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்அமைச்சினால் உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து . பிரச்சினைகளைத் தீர்க்கநடவடிக்கை எடுக்கப்படும்.

5.6 மேற்குறித்த சகல நிபந்தனைகளையும், கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் போது இந்த வழிகாட்டல் ஆவணத்தின் ஆம் பந்தியிற்கு அதிகளவான கவனத்தை செலுத்தி 1.6 .செயல்படுவது இதனுடன் தொடர்புடைய சகல தரப்புகளினதும் பொறுப்பாகும்

## 6. சுற்றாடல்நேய உரக் களஞ்சியசாலைகளும் மற்றும் அந்த களஞ்சியசாலைகளைப் பதிவு செய்தலும்

6.1. வணிகளவில் சுற்றாடல்நேய உரங்களை களஞ்சியப்படுத்தும் நிலையங்களை தேசிய உர செயலக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்வது ஒரு சட்டமுறையான தேவைப்பாடாகும்.

6.2. ஆகையால், நிவாரண அடிப்படையிலான சுற்றாடல்நேய உரங்கள் பகிர்ந்தளிப்பு பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படுகின்ற அனைத்து நிறுவனங்களும், தற்பொழுது தேசிய உர செயலக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளாத உர களஞ்சியசாலைகளை கீழே காணப்படும் விபரங்களை தேசிய உர செயலக அலுவலகத்திற்கு சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

6.2.1. நிறுவனத்தின் பெயர்
6.2.2. களஞ்சியசாலையின் பெயரும் அமைந்துள்ள இடமும்
6.2.3. களஞ்சியசாலையின் கொள்ளளவு (மெ.டொ. /லீற்றர்)
6.2.4. அருகிலுள்ள நகரம் மற்றும் அந்த நகரத்திலிருந்து களஞ்சியசாலைக்கு பிரவேசிக்கக் கூடிய வீதிகள் பற்றிய விபரங்கள்

## 7 நிவாரண வரையறயைகளை விஞ்சி உரங்களை விற்பனை செய்தல், பணத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கைகளை பேணுதல் மற்றும் விநியோகத் தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துதல்

7.1 இந்த வழிகாட்டல் ஆவணத்தின் 1.1 ஆம் விடயத்திற்கு இணங்க நிவாரண வரையறையை விஞ்சி சுற்றாடல்நேய உரங்களுக்கு விண்ணப்பிக்கப்படுமாயின் அந்த தேவை உடைய விவசாயிகள் உரிய சுற்றாடல்நேய உர உற்பத்தி நிறுவனத்திடமிருந்து தனிப்பட்டரீதியில் பணத்தை செலுத்தி அந்த அளவு உரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 8 சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துதல்

8.1 2022/23 பெரும்போகத்தில், விவசாயிகளுக்கு நிவாரண திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சுற்றாடல்நேய உரங்களுக்கு உரிய உற்பத்தி நிறுவனத்திற்கு இந்த வழிகாட்டல் ஆவணத்தினது 2.2 மற்றும் 7.1 ஆம் பிரிவுகளுக்கு கவனத்தை செலுத்தி மாவட்ட செயலகம் கொடுப்பனவுகளை செய்ய வேண்டும்.

அதன் போது நிதியை கோருவதற்காக 08 ஆம் அட்டவணையில் உள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்க அந்தந்த மாவட்டங்களின் பிரதி/உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளர்கள் ஒரு வேண்டுகோளை கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அதற்கு அமைய பணத்தை செலுத்தும் பொருட்டு பிரதி/உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளர்கள் வழங்கும் சிபாரிசுகளையும் மாவட்ட செயலாளர் வழங்கும் அனுமதியையும் 09 ஆம் அட்டவணையின் பிரகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொடுப்பனவுகளை 10 ஆம் அட்டவணையில் உள்ள மாதிப் படிவத்தின் பிரகாரம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி சான்றுபடுத்தி கொள்ள வேண்டும்.

8.2 சுற்றாடல்நேய உர உற்பத்தி தரப்புகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது கீழ்காணும் உரிய ஆவணங்களை பரிசீலித்து செலுத்த வேண்டும்.

i. கொள்வனவு கட்டளைக்கு (PO) உரிய விநியோக தரப்பின் பிரதி

ii. கொள்வனவு கட்டளைக்காக விநியோக தரப்பு கமநலஅபிவிருத்தி பிராந்திய அலுவலகத்திற்கு விநியோகித்த உர விற்பனை செலவுப்பட்டியல் (Invoice)

iii. அந்த விற்பனை செலவுப்பட்டியலுக்கு (Invoice) உரிய கமநலசேவை நிலையத்தின் மூலம் உரம் பெற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தி விநியோகித்த பொருட்கள் ஏற்பு அட்டையினது கமநல அபிவிருத்தி பிராந்திய அலுவலகத்திற்கு உரிய பிரதியும் விநியோக தரப்புக்கு உரிய பிரதியும்

iv. தேசிய உர செயலகம் விநியோகித்த தொகுதிற்குரிய தர நியமத்தை அனுசரிப்பதாக உறுதிப் படுத்தி வழங்கிய சான்றிதழ்

v. 5.5.1.5 இன் பிரகாரம் வினைத்திறன் பண்பு பற்றிய சான்றிதழ்

## 9 சுற்றாடல்நேய நிவாரண உரங்களை பகிர்ந்தளிக்கும் போது உள்நாட்டு உர உற்பத்தித் தரப்புகளின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும்

9.1 உள்நாட்டு சுற்றாடல்நேய உர உற்பத்தித் தரப்புகள் உரங்களை, குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கும் தர நியமங்களுக்கும் ஏற்ப விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

9.2 உற்பத்தித் தரப்பு முன்மொழிந்துள்ளவாறு, விவசாயிகளின் வயல் காணிகளுக்கு ஏற்ப உரங்களைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை உற்பத்தித் தரப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே போல், பயிரிடப்படும் காலப் பகுதியினுள் விவசாயிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்கும் பொறுப்பையும் உற்பத்தித் தரப்புகள் / பகிர்ந்தளிக்கும் தரப்புகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள உர உற்பத்திகளின் தர நியமங்கள் சம்பந்தமாக எழுகின்ற எந்த ஒரு பிரச்சினைக்கும் தேசிய உர செயலக அலுவலகம் பொறுப்புக்கூறாது. ஒரு உற்பத்தியினுள் அடங்கியிருக்க வேண்டிய தரம் குறைவான அல்லது கலவை உர அளவுகள் தொடர்பாக, உரிய சட்டத்தின் கீழ் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

9.3 கொள்வனவுக் கட்டளையில் அவ்வப்பொழுது குறிப்பிடப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், தரம் பற்றிய நெறிமுறைகள், பொருட்களை ஒப்படைக்கும் கால அட்டவணைகள் என்பவற்றை முற்றிலும் அனுசரித்து உர உற்பத்தித் தரப்புகள் உரங்களை விநியோகிக்க வேண்டும்.

9.4 கொள்வனவுக் கட்டளையை உற்பத்தித் தரப்புக்கு விநியோகித்த நாளிலிருந்து 10 நாட்களுக்குள் உற்பத்தித் தரப்பு குறித்த உரங்களை விநியோகிக்க வேண்டும். அதன் நிமித்தம் பொருட்களை ஒப்படைப்பதற்கான மாதிரிப் படிவத்தின் (அட்டவணை 01) பிரகாரம், கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தரினது ஒருங்கிணைப்பில் விவசாயிகளின் உரிய மத்திய நிலையங்களுக்கு உர உற்பத்தித் தரப்பு அந்த உர உற்பத்திகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

9.5 உரப் பொதியில் ஏதாவது பழுதடைந்திருந்தால் அந்த உற்பத்தியை நிராகரிக்க வேண்டும்.

9.6 சோதனையிடுதலும் மற்றும் பரிசீலித்தலும்

9.6.1 ஒவ்வொரு உரத் தொகுதிற்கும் தேசிய உர செயலக அலுவலகம் அதிகாரம் அளித்த உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொள்ளும் தர மற்றும் தகுதி பரிசீலனை ஒன்றுக்காக சமர்ப்பிப்பதற்கும் மற்றும் அந்தத் தொகுதியின் உரங்களை அரசாங்க இரசாயன ஆய்வு கூடம் ஒன்றினுள் பரிசீலனைக்கு உட்படுத்தி உறுதிசெய்து கொள்வதற்கும் என தேசிய உர செயலக அலவலகத்தின் பணிப்பாளர் ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். அந்தப் பரிசீலனைக்கு செலவாகும் செலவுகளை உர உற்பத்தித் தரப்பு பொறுப்பேற்க வேண்டும்.

9.7 உற்பத்தித் தரப்பு விவசாயப் பணிப்பாளர் நாயகம் விதித்துள்ளவாறு கள ரீதியான பரிசேதனைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

9.8 சகல உற்பத்தித் தரப்புகளும் தமது உர உற்பத்தித் தொகுதிகளுக்கு இடையில் தேசிய உர செயலக அலுவலகம் மேலெழுந்த வாரியாக தேர்ந்தெடுக்கும் உரத் தொகுதியின் ஒரு உர மாதிரியை இலங்கை சான்றுபடுத்தும் சபை சிபாரிசு செய்த சேதன உரத்திற்கான அந்தந்தத் தகவுதிறன்களின் நிமித்தம் சான்றுபடுத்தப்பட்டுள்ள ISO 17025 தர சான்றிதழ் பெற்ற ஒரு இரசாயனப் பகுப்பாய்வு கூடத்திலிருந்து பகுப்பாய்வை செய்து கொள்ள செலவாகும் செலவுகளையும் உரிய செயற்பாட்டு செலவுகளையும் பொறுப்பேற்க வேண்டும்.

9.9 ஏதாவது ஒரு உர மாதிரி / ஒரு உர உற்பத்தி தேசிய உர செயலக அலுவலகத்தின் தகவுதிறன்களை அனுசரிக்காத பட்சத்தில் 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் கீழ் அதற்கு

எதிராக சட்டநடவடிக்கையை எடுக்க தேசிய உர செயலக அலுவலகத்திற்கு அதிகாரம் உண்டு. அதே போல் உரிய உற்பத்தித் தரப்பு அந்த உரிய உரத் தொகுதியை விநியோகித்திருக்கும் சந்தர்ப்பத்திலும் கூட, அதன் நிமித்தம் எந்த ஒரு கொடுப்பனவையும் செலுத்தாமலேயே அந்த உரத் தொகுதிற்குரிய உற்பத்தி சார்ந்த ஒப்பந்தத்தை நிறுத்த அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் உண்டு.

## 10 சுற்றாடல்நேய உரங்கள் உரிய விதத்தில் பாவிக்கப்படுவதை உறுதிசெய்தல்

10.1 பெற்றுக் கொள்ளப்படும் சுற்றாடல்நேய உரங்கள் குறித்த விவசாயிகளினால் உரிய தரங்கள், உரிய அளவுகள் மற்றும் உரிய நேர காலத்திற்கு உரிய பயிர்களுக்குப் பாவிக்கப்படுகின்றனவா என்பதை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் உறுதிசெய்துகொள்ள வேண்டும். அந்த வேலைத் திட்டத்தை விவசாய ஆலோசகர்களும் கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களும் நெருங்கி கண்காணிக்க வேண்டும்.

10.2 கூடுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தேசிய உர செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் தமது கள ரீதியான விஜயங்களின் போது சரியான முறையில் உரங்கள் பாவிக்கப்படுகின்றனவா என்பது பற்றி கண்காணிக்க வேண்டும். தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் முன்னேற்ற அறிக்கைகளில் அது தொடர்பான விபரங்களை உள்ளடக்க வேண்டும்.

## 11 கண்காணிப்பு

11.1 உரிய கண்காணிப்பு, முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல், முன்னேற்ற மீளாய்வு, பெறுபேறுகளின் மதிப்பீடு என்பவற்றில்தான் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது. எனவே பங்காளித்துவத் தரப்புக் குழுக்கள் மற்றும் நன்மை பெறுநர்கள் அதிகளவில் உள்ள உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயற்படுத்துகை முறையியல்களும் மூலோபாயங்களும் அடங்கலாக அறிவுரைகளை எவ்வளவுதான் வழங்கினாலும், உரிய கண்காணிப்பும், மதிப்பீடும் இல்லாமல் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அல்லது பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாது.

11.2 சுற்றாடல்நேய தேவையான உரங்களை மதிப்பிடுதல், பெற்றுக் கொள்ளல், பகிர்ந்தளித்தல் மற்றும் பயிர்களுக்கு இடுதல் முதலிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெருங்கிக் கண்காணிக்கும் பொருட்டு வலிமையான ஒரு வேலைத் திட்டம் சுற்றாடல்நேய மாவட்ட உர செயல் குழுவினால் செயற்படுத்தப் படுதல் வேண்டும். இந்தக் குழுவில் ஒவ்வொரு நிருவாக மட்டத்தையும் பிரதிநிதிப்படுத்துகின்ற நிறுவனங்களையும் அவற்றின் உத்தியோகத்தர்களையும் சரியாக இணங்கண்டு கண்காணிப்புப் பொறுப்பை சரியாக உரிய முறையில் ஒப்படைப்பது அவசியமாகும்.

11.3 தனது மாவட்டத்திற்கான உரங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் செயற்பாட்டை கமநல சேவை நிலைய மட்டத்தில் கண்காணிப்பதும் மற்றும் அந்த நிகழ்ச்சித் திட்டங்களின் உரிய இலக்குகளின் பிரகாரம் செயல்படுவதும் மாவட்டத்திற்கு பொறுப்புடைய சகல கமநல அபிவிருத்தி பிரதி / உதவிப் பணிப்பாளர்களின் நேரடியான ஒரு பொறுப்பாகும். மேலும், தேசிய உர செயலக அலுவலகம் மாவட்டங்களுக்கு என நியமித்துள்ள உதவிப் பணிப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் உர நிகழ்ச்சித் திட்டத்தை முறையாக செயற்படுத்தும் நேரடியான பொறுப்பையும் கொண்டுள்ளனர்.

11.4 சகல அதிகாரப் பிரதேசங்களினதும் சுற்றாடல்நேய நிவாரண உரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு உரிய அனைத்து விடயங்களையும் இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க பிரதேச செயலாளர்கள் வழிகாட்டி கண்காணிப்பார்களாயின் மிகவும் பொருத்தமாகும். தேவையான உரங்களை மதிப்பிட்டு உரங்கள் பகிர்ந்தளிப்பு பற்றிய முன்னேற்றமும் பிராந்திய விவசாயக் குழுக் கூட்டங்களின் போது விரிவாக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

11.5 ஒவ்வொரு மாவட்டத்திற்கும், உரிய பயிர்ச் செய்கைப் போகத்தினுள் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு என எதிர்பார்த்த சுற்றாடல்நேய உரங்களின் அளவுகளில் பிரச்சினைகள் எழாத வகையில் உரங்கள் பகிர்ந்தளிப்புக்கு மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு வழிகாட்டுமாயின், மிகவும் சிறந்ததாகும்.

## 12 தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல்

12.1 நிவாரண அடிப்படையிலான சுற்றாடல்நேய உரங்கள் பகிர்ந்தளிப்பு வேலைத்திட்டத்தை முறையாக செயற்படுத்த தகவல்களையும் முன்னேற்ற அறிக்கைகளையும் உரிய நேர காலத்திற்கு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். சுற்றாடல்நேய உரங்களைப் பெற்றுக் கொள்ளல், அந்த உரங்களை களஞ்சியப் படுத்தல் மற்றும் உங்களை விநியோகித்தல் முதலிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற

எந்த ஒரு நிறுவனமாக அல்லது நபராக இருந்தாலும், தேசிய உர செயலக அலுவலகம் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்ற தகவல்களை அல்லது அறிக்கைகளை சமர்ப்பிப்பதானது 1988 இன் 68 ஆம் இலக்க உரங்கள் ஒழுங்குறுத்துகை சட்டத்தின் 12 (1) (உ) பிரிவின்படி சட்டமுறையான கடப்பாடாகும்.

12.2 பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளித்தல் முடிவடைந்த தினத்திலிருந்து ஒரு வார காலத்திற்குள் சகல விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களும் அந்த உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாதுள்ள பிரதேசங்களில், உரிய உத்தியோகத்தர்களும் சுற்றாடல்நேய நிவாரண உரங்களைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளின் பெயர்கள் மற்றும் பெற்றுக் கொண்ட உரங்களின் அளவுகள் என்பவற்றைக் குறிப்பிடுகின்ற ஒரு பட்டியலைத் தயாரித்து அந்தப் பட்டியலை தத்தமது அலுவலகங்களிலும், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும், கமக்காரர் அமைப்புகளின் தலைவர்களினது இல்லங்களிலும் மற்றும் மகாவலிப் பிரதேசங்களின் மகாவலிப் பிரிவு முகாமையாளர் அலுவலகங்களிலும் பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு காட்சிப் படுத்த வேண்டும்.

12.3 இந்தப் பட்டியல் மற்றும் சுற்றாடல்நேய உரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட அளவுகள் ஆகியன தொடர்பாக பொது மக்கள் செய்யும் முறையீடுகளை விசாரிப்பதற்காக உரிய பிரதேச செயலாளர்களுக்கும் மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதிகளுடன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கும் குறிப்பீடு செய்வதற்கான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

12.4 விவசாயிகள் செய்யும் சகல முறைப்பாடுகளையும் பதிவதற்கு கமநல சேவை நிலைய மட்டத்தில் ஒரு முறையான முறையியலை தயாரிக்க வேண்டும். அந்த நோக்கத்தின் நிமித்தம் ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலும் தெளிவாக தென்படும் ஒரு இடத்தில் முறைப்பாடுகளை பதிவதற்கான ஒரு புத்தகத்தை /பெட்டியை தயார்படுத்தி வைக்க வேண்டும். முறையான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும். கிடைக்கும் முறைப்பாடுகளும் அந்த முறைப்பாடுகள் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளும் பற்றிய ஒரு மாதாந்த அறிக்கையை பிரதி/உதவி ஆணையாளர்கள் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு, கமத்-தொழில் அமைச்சுக்கும் ஒரு பிரதியுடன் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

12.5 உரங்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான முன்னேற்றம், விவசாயிகளுக்கு விநியோகித்தல் தொடர்பான முன்னேற்றம் மற்றும் உரக் களஞ்சியசாலைகளிலுள்ள உரங்களின் இருப்புத் தொகை முதலியவற்றைக் குறிப்பிடுகின்ற அறிக்கைகளை ஒவ்வொரு திங்கட்கிழமை நாளிலும் மு.ப. 09.00 மணிக்கு முன்னதாக தத்தமது கமநல சேவை பிராந்திய நிலையங்களிலிருந்து அந்தந்த மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி/உதவி ஆணையாளர்களும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கும் உரங்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பான வாராந்த அறிக்கையை அட்டவணை 11 இன் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டும்.

12.6 நிவாரண அடிப்படையிலான உரங்கள் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படும் கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரையான சகல நிறுவனங்களும் தாம் பொறுப்பு வகிக்கின்ற கரும பணிகளின் அளவுகளுக்குரிய ஒரு மாதாந்த முன்னேற்ற அறிக்கையை, அடுத்த மாதத்தின் 05 ஆம் திகதி முடிவடைவதற்கு முன்னர் தமது கண்காணிப்பு உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

12.7 நிவாரண அடிப்படையிலான சுற்றாடல்நேய உரங்கள் பகிர்ந்தளித்தல் பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்படும் சகல பிராந்திய மட்ட உத்தியோகத்தர்களும் உரங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான முன்னேற்றத்தை சுட்டிக் காட்டுகின்ற அறிக்கைகளை பிராந்திய விவசாயக் குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

12.8 கீழ்காணும் அறிக்கைகளை அந்தந்த நிறுவனங்கள் **உரிய காலப் பகுதியினுள் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.**

12.8.1 பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண அடிப்படையிலான சுற்றாடல்நேய உரங்களின் விநியோகம் முடிவடைந்த தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் அந்தப் பயிர்ச் செய்கைப் போகத்தில் உரங்கள் பகிர்ந்தளித்தமை பற்றிய அறிக்கை கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களால் (அட்டவணை 12) பிரகாரம் மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிராந்திய / உதவி ஆணையாளர்களுக்கும் தேசிய உர செயலக அலவலகத்தின் பணிப்பாளருக்கும் பிரதிகள் சகிதம் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

- பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைந்து நடத்தப்படும் அண்மித்த கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டத்தில் குறித்த இந்த முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் விரிவாக ஆராயப்பட்டு, அவற்றின் செவ்வைத்தன்மை உறுதிசெய்யப்பட்டு தமது அவதானிப்புகள் அடங்கிய ஒரு அறிக்கை மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்தி பிராந்திய ஆணையாளர்களினால்/ உதவி ஆணையாளர்களினால் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

- தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களும் மேற்குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டு பயிர்ச் செய்கைப் போகத்தினுள் சுற்றாடல்நேய நிவாரண உரங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் பொருட்டு கமநல அபிவிருத்தி பிராந்திய / உதவி ஆணையாளர்களுக்கு உதவுதல் வேண்டும். தமது மாவட்டத்தின் கமநல சேவை நிலையங்களை தனித்தனியாக வெவ்வேறாக கருத்திற் கொண்டு உரங்கள் பகிர்ந்தளிப்பு பற்றிய முன்னேற்றத்தை குறிப்பிடுகின்ற பகுப்பாய்வு ரீதியான ஒரு அறிக்கை, பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

- தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் மாவட்டத்தின் உரங்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பான ஒரு மாதாந்த சுருக்க அறிக்கையை (அட்டவணை 13) இன்படி அடுத்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிற்கு முன்னர் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## 13 முன்னேற்ற மீளாய்வு

13.1 தேவையான சுற்றாடல்நேய உரங்கள் அளவுகளை மதிப்பிடுதல், பெற்றுக் கொள்ளல், பகிர்ந்தளித்தல் மற்றும் பயிர்களுக்கு இடுதல் என்பன பற்றி கீழ்காணும் கூட்டங்களிலும் மற்றும் குழுக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்படுதல் வேண்டும்.

i. கமக்காரர் அமைப்புகளின் மாதாந்தக் கூட்டம்
ii. கமநல சேவை ஆலோசனைக் குழுக் கூட்டம்
iii. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் வாராந்தக் கூட்டம்
iv. கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டம்
v. விவசாய ஆலோசகர்களின் மாதாந்தக் கூட்டம்
vi. ஏனைய பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சி / கருத் திட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்தக் கூட்டம்
vii. அரசாங்க உரக் கூட்டுத் தாபனங்களின் பிராந்திய மற்றும் விடயத்திற்குப் பொறுப்புடைய முகாமைத்துவ உதவியாளர்களின் மாதாந்தக் கூட்டம்
viii. பிராந்திய விவசாயக் குழுக் கூட்டம்
ix. மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம்
x. கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்களின் கூட்டம்
xi. விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண விவசாயப் பணிப்பாளர்களுடன் நடத்தப்படும் கூட்டம்
xii. பயிர்ச் செய்கைப் போகங்களின் முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டம்
xiii. நீர்ப்பாசன அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
xiv. மகாவலி அபிவிருத்தி தொழில்முயற்சிகளுக்குரிய தொழிமுயற்சிக் குழுக் கூட்டம்
xv. சுற்றாடல்நேய மாவட்ட உர செயல் குழுக் கூட்டம்

## 14. பெறுபேறுகளை மதிப்பிடுதல்

14.1. சுற்றாடல்நேய உரங்களை இட்டு நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் கமநல சேவை நிலைய அதிகாரப் பிரதேசங்களில் ஒவ்வொரு நெற் பயிர் பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி ஒருவரின் வயல் காணி கள ரீதியான பரிசீலனைப் பிரிவாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். அந்த விவசாயினது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வயல் காணியின் பெயர், வயல் காணியின் அளவு முதலியன போன்ற விபரங்கள் அடங்கலாக பயிரிடப் பட்டுள்ள நெல் இனம், இடப்படும் உர வகைகள், பயிரிடுவதற்கு முன்னர் மண்ணின் தன்மை மற்றும் உரிய பயிர்ச் செய்கைப் போகத்தில் பயிர்களின் வளர்ச்சி தொடர்பாக

பெற்றுக் கொள்ள வேண்டிய ஏனைய தரவுகள் என்பவற்றை பொருத்தமான விதத்தில் பெற்றுக் கொள்வதற்கு விவாசயப் பணிப்பாளர் நாயகத்தினால் சரியான ஒரு முறையியல் அறிமுகப்படுத்தப்படும்.

14.2. நிவாரண அடிப்படையில் சுற்றாடல்நேய உரங்களைப் பெற்றுக் கொடுப்பதனால் விளைச்சல்களின் பயன்கள், விவசாயிகளின் வாழ்வாதார நிலைகள் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றுக்கு கிடைத்த நன்மைகள் பற்றி ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகம் முடிவடைந்து ஒரு மாத காலப் பகுதிற்குள் மதிப்பீடு செய்து அவதானிப்புகளை முன்வைக்க சுற்றாடல்நேய மாவட்ட உர செயல் குழு உரிய நடவடிக்கையை எடுக்குமாயின், மிகவும் பொருத்தமாகும்.

14.3. மாவட்டத்திற்கு பொறுப்புடைய கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்களினால் சகல மாவட்டங்களினதும் ஒவ்வொரு கமநல சேவை நிலையத்தையும் கருத்திற் கொண்டு ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்தில் நிவாரண உரங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியன பற்றிய ஒரு மதிப்பீட்டு அறிக்கை மாவட்ட செயலாளருக்கும், விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கும் மற்றும் தேசிய உர செயலக அலுவலகத்தின் பணிப்பாளருக்கும் பிரதிகளுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.